நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

பகுதி: 8
தொகுதி: 113
திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்
விலை: ரூ.20
ஆகஸ்ட் - 2019

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

# தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| பேராசிரியர் இரா.சதாசிவம் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |

# செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | தலைவர் |
| திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் து.மாயராசன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் சு.சிவசாமி | உறுப்பினர் |
| பொறியாளர் லெ.சிவக்குமார் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |
| முனைவர். ம.லில்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. **இதழ் மணம்** – பேராசிரியர். **இரா. சதாசிவம்** **4**

2. **சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா** **6**
– முதுமுனைவர். **இரா. இளங்குமரனார்**

3. **காப்பிய உவமைகள் – ஹோமர், மில்டன் சங்க சான்றோர்** – பேராசிரியர். **ப. மருதநாயகம்** **11**

4. **தொடரியல் கோட்பாடு** **18**
– பேராசிரியர். செ.வை. சண்முகம்

5. **மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் அழகியல்** **32**
– பேராசிரியர். ம. திருமலை

6. **மதுரைக் காஞ்சி : மேலாய்வுக் களம்** **36**
– முனைவர். இ.கி. இராமசாமி

7. **சங்கச் செய்திகள்** **41**


**வலைத்தளம்**

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

**மின்னஞ்சல்**


secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in


| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ.200 | ரூ.1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ,3,000 | ரூ.10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ.10,000 | ரூ.20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ.20 | |

# இதழ் மணம்

**பேராசிரியர் இரா.சதாசிவம்**

பேராசிரியர் இ. கி. இராமசாமி அவர்கள் மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் மாங்குடி மருதனாரின் பெயர் குறித்தும் பாட வேறுபாடு குறித்தும் எழுதியுள்ள செய்தி விரிந்த ஆய்வுப் பார்வையுடையதாகும்.

பட்டினப்பாலையுள் பல்கேள்வித்துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர்" என மேற்கோள்காட்டிஇ மதுரைக் காஞ்சியுள் பல்வேள்வித்துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர்" எனப் பொருள் வேறுபட சொற்றொடர் அமைந்திருப்பதைச் சுட்டி ஆய்வு மேற்கொண்டிருப்பது காலமும்இ இடமும் உரையாசிரியர்களின் மாறுபட்ட பார்வைக்குக் காரணமாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைப்பது சிந்தனைக்குரியதாகும்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு" என்னும் நோக்கில் கேள்வியை வேள்வி என்று பாடபேதம் கொண்டிருக்க வேண்டும். அதற்கு உ. வே. சா காட்டும் அடிக்குறிப்பு நோக்கத்தக்கது. சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்" என்னும் தொல்காப்பியத் தொடருக்கும் பெறலரும் பரிசில் நல்குவன்" என முருகாற்றுப்படுத்ததாக நக்கீரர் திருமுருகாற்றுப்படையை முடித்ததாக உரை நிறைவு செய்வார். பெறலரும் பரிசில்" என்பதைக் கந்தழி" என்றும் அது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்: வாய்மொழியான் மெய்யான் மனத்தானறிவிறந்த, தூய்மையதா மைதீர்சுடர் என விளக்குவார்.

உ. வே. சா. இக்கருத்தை நச்சினார்க்கினியரை மேற்கோள்காட்டி வேள்விக்களத்தோடு ஒப்பிடுவது பொருத்தமற்றதாகும். வேள்வி என்பது ஒருவகைச் சமயச்சடங்குஇ விளம்பர ஆரவாரம் மிக்கது. அரசு அந்தணர் மிகைப்பொருள் வீச்சுமாகும். அதற்கும் மெய்யியல் சான்றோர் பல்கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர் வாழ்வு நெறிக்கும் சற்றும் ஏற்புடையதல்ல வேள்வி என்பது நல்லாசிரியர் வேண்டாப் பொருளுமாகும்.

மாங்குடி மருதனாருக்கும் நச்சினார்க்கினியருக்கும் ஓராயிரம் ஆண்டு இடைவெளி இருக்கலாம். உ. வே. சாவுக்கும் உரை ஆசிரியருக்கும் நூலாசிரியருக்கும் கால இடைவெளி வெளிப்படை. காலமாற்றத்தால் இந்தப் பெருநிலப்பரப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் பல: சமயச்சடங்குகளும் பலப்பல தோன்றின. சமயச் சடங்குகள் வேள்வியாளர் வகுத்தன. ஆய்ந்த சொல் நுண்தேர்ச்சிப் பேராசிரியப் பெருமக்கள் இது குறித்து

இயல்பு வாழ்க்கை நெறிக்குத் தொல்லாணை நல்லாசிரியர் அறிவுறுத்துவது வேள்வியா? கேள்வியா? என்பதை பரந்து விரிந்த தம் கல்விப்புலத்தால் முடிவு செய்யலாம்.

பேராசிரியர் ப.மருதநாயகம் காப்பிய உவமைகள் குறித்து மேலைநாட்டுக் காப்பிய ஆசிரியர்கள், கல்வியாளர்கள் பயன்படுத்தியுள்ள உவமைகளைச் செவ்விய தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பிட்டு மேற்கொண்டுள்ள ஆய்வு முறை இலக்கியம் பயிலும் பயிற்றும் ஆசிரியர்களுடைய சிந்தனைக்குரியதாகும். சங்க இலக்கியச் சான்றோர் கவிதைகளின் மாண்பு பிறநாட்டு நல்லறிஞர் இலக்கியத்தோடு ஒப்பிடும் போது தமிழ்க்கவிதையை அனுபவிக்கும் பேறு நவில்தொறும் இன்பம் பயப்பதாகும்.

பேராசிரியர் இளங்குமரனார் பெயர் ஊர் தெரியாத சங்கப்புலவருக்கு நம் முன்னோர் பெயர்சூட்டி மகிழ்ந்திருப்பதை எடுத்துரைத்து கற்போரைச்சிந்திக்க வைக்கிறார். சங்கச்சான்றோர் கவிதையில் ஆழங்கால்பட்ட கல்வியாளர்கள் பாடலின் சொல் இன்பத்தில்இ கவிதையின் அழகுணர்ச்சியில்இ கவிதைகள் காலத்தைவென்று கற்பவர் நெஞ்சில் நீங்கா இடம்பெறும் உண்மை தேர்ந்துஇ பாடலும் படைத்த புலவரும் ஒன்றாகப் பார்க்கும் வண்ணம் பெயர் அமைந்திருப்பதை எடுத்துரைக்கும் சிறப்பு உணர்தற்குரியது.

பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் தொடரியல் கோட்பாடு குறித்த கட்டுரையை மாணவர் ஆசிரியர் பயன்பெறும் வகையில் அரிதின் முயன்று வடிவமைத்துள்ளார். தொடர் அமைப்பு ஒரு மொழியின் பொருளைத் தீர்மானிக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியிருப்பது மொழியைப் பயன்படுத்துவோர் கவனத்திற்குரியது. பொருள் மயக்கம் இன்றித் தொடரைப் படைப்பதுஇ படைப்பாளியின் கல்விப் புலத்தையும் சிறப்பையும் வெளிப்படுத்துகிறது. பேராசிரியர்.செ.வை.சண்முகம் உலகம் நன்கு அறிந்த கல்விச் சான்றோர். அப்பெருமகனார் எழுதியுள்ள இக்கட்டுரை ஆசிரியர் மாணவர் கவனத்திற்குரியதாகும். கற்று இன்புறுக.

அடுத்துப் பேராசிரியர் ம.திருமலை அவர்கள் சென்ற இதழில் எழுதிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் அழகியல்" என்னும் கட்டுரை இவ்விதழில் நிறைவு பெறுகிறது. இடநெருக்கடி காரணமாகக் கட்டுரை முழுவதையும் ஒரே இதழில் போட முடிவதில்லை. அடுத்தடுத்த இதழ்களில் போட வேண்டியுள்ளது. வாசகர்கள் தொடர்ந்து சேர்த்து வைத்துப் படிக்க வேண்டிய சிரமம் ஏற்படுகிறது. பொறுத்தருள்க.

# சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர். **இரா. இளங்குமரனார்**

## 3. ஊட்டியார்

'**ஊட்டுதல்**' என்பது மக்கள் வழக்கில் இயல்பான சொல். ஊட்டியார் என்றதும் 'பாட்டியார்' நினைவுக்கு வருவதும் இயல்பு. குழந்தைக்குக் குழைய வெந்த சோற்றில் பருப்பும் நெய்யும் சேர்த்துப் பிசைந்து சிறு சிறு திரளையாய் ஊட்டுதலும், ஓட ஓடத் தாமும் ஓடி ஊட்டுதலும் கண் காண் காட்சியே!

ஊழல் பொருளில் '**கையூட்டு**' என்பதும் எவரும் அறிந்த சொல்லாயிற்று. வெண்ணிறத்துணியில் நீலச் சாயம் கலத்தலை

'நீல் உண் துகில்'

என்பது பழநாள் வழக்கு. துகில் நீலத்தை உண்ணுமா எனின்,

"உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே"

என்கிறது தொல். 1159.

அதுபோல்,

'**ஊட்டி** அன்ன ஒண்தளிர்ச் செயலை'

என்னும் ஒரு தொடர் கொடுத்த ஒற்றைச் சொல்லைக் கொண்டு சான்றோர் பெயர்க்குரிய இறுதியாகிய ஆர்சேர்த்து

'**ஊட்டியார்**'

என வழங்கப் பெற்றார். ஊட்டியார் பாடல் அகநானூற்றில் (68, 388) இடம் பெற்றுள்ளது. இரண்டு பாடல்களிலும் 'ஊட்டி' இடம் பெறுகிறது.

முதற்பாடலில் (68)

**"ஊட்டி அன்ன ஒண்டளிர்ச் செயலை"**

என்றும், பின்னைப் பாடலில் (388)

**"ஊட்டி அன்ன ஊன்புரள் அம்பு"**

என்றும் இடம் பெற்றுள.

செயலை என்பது அசோகு. அரக்கு ஊட்டப்பட்டது போன்ற அசோகந் தளிர் என்றும், குருதியும் ஊனும் ஊட்டப்பட்ட சிவந்த அம்பு என்றும் இத்தொடர்களுக்குப் பொருளாம்.

பாடியோர் பெயர் காணப்படாத இரண்டு பாடல்கள் ஒருங்கே ஓரிடத்துக் கிடைத்துள. அவற்றைப் பாடியவர் **'ஊட்டி'** என்னும் சொல்லை நயமாக அமைத்துளார். ஆதலால், அப்பாடலைப் பாடியவர் ஊட்டியார் எனக் கொண்டனர்.

அப்பாடல்கள் இரண்டும் அகப்பாடல்கள்; 13 அடிகளுக்கு மேற்பட்டவை. ஆதலால் குறுந்தொகையிலோ நற்றிணையிலோ இணைக்காமல் நெடும் பாடல்களைக் கொண்ட அகநானூற்றில் இணைத்தனர்.

அவற்றை அடுத்தடுத்து வைத்திருக்கலாமே என்றால் அகநானூற்றின் வைப்பு முறை அதற்கு இடந்தரவில்லை.

**ஒற்றைப்படை** எண் பாடல்கள் எல்லாம் **பாலைத்திணை.** ஆதலால் 69ஆம் பாடல் பாலைத் திணைப் பாடலாக வைக்க வேண்டுமே அல்லாமல் இரண்டும் தலைவன் இரவுக்குறி வந்தது பற்றிய பாடல்கள். ஆதலால், தொகை செய்தார் விருப்பப்படி பின்னே அமைத்தார். இரண்டாம் எண்ணில் வருவதும் எட்டாம் எண்ணில் வருவதும் **குறிஞ்சிப் பாடலாம்.**

அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தண்ணயத் தமன்ற கூதளங் குழைய
இன்னிசை அருவிப் பாடும் என்னதூஉம்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை
5. **ஊட்டி அன்ன ஒண்தளிர்ச் செயலை**
ஓங்குசினைத் தொடுத்த ஊசல் பாம்பென
முழுமுதல் துமிய உருமெறிந் தன்றே
பின்னும் கேட்டியோ எனவும் அஃ தறியாள்
அன்னையும் கனைதுயில் மடிந்தனள் அதன்தலை

மன்னுயிர் மடிந்தன்றால் பொழுதே காதலர்
வருவ ராயின் பருவம் இதுவெனச்
சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயின்
படர்ந்த உள்ளம் பழுதன் றாக
வந்தனர் வாழி தோழி அந்தரத்து
இமிழ்பெயல் தலைஇய இனப்பல கொண்மூத்
தவிர்வில் வெள்ளம் தலைத்தலை சிறப்பக்
கன்றுகால் ஒய்யும் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவும்
அகல்வாய்ப் பாந்தள் படாஅர்ப்
பகலும் அஞ்சும் பனிக்கடுஞ் சுரனே — ஊட்டியார்

இது, தலைமகன் இரவுக் குறி வந்ததை அறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

**இதன்பொருள்:** 'அன்னையே வாழ்வாயாக! நான் சொல்வதை விரும்பிக் கேட்பாயாக. நம் தோட்டத்துள்ள கூதாளம் சிதையுமாறு அருவி முழங்கி விழும் ஒலி கேட்டாயோ? அரக்கு ஊட்டப்பட்டால் போன்ற தளிரை உடைய அசோகின் உயர்ந்த கிளையில் கட்டப்பட்ட ஊசல் கயிற்றைப் பாம்பென எண்ணி இடி இடித்து அடியோடு சாய்த்ததை அன்னையே கேட்டாயோ? என்று வினவவும், அவள் விடைதாராளாய் அயர்ந்து உறங்குவது கண்டும் ஊர் உறங்குவது அறிந்தும்,

"காதலர் வரும்பொழுது ஈதாகலின் நம்மை மெலியச் செய்த அவர் சொல் பழுதில்லாமல் வந்தனர்.

தோழி பெரு மழையால் வெள்ளம் பெருக யானைக் கன்றினை நீர்ச்சுழி இழுக்க அதன் தாயாம் பெட்டையானை ஆண்யானையை அழைத்துக் கன்றை மீட்டுவதற்கு முழங்கும் பாம்புச் செடி படர்ந்த வழி அஞ்சத் தக்கதாம்" என்னும் வகையால் வரும்வழி அருமையும் இடரும், தங்கள் அச்சமும் கூறி வரைதலை மேற்கொள்ளுமாறு தலைவனைத் தூண்டியது இதுவாம்.

**அரும்பொருள்** : படப்பை — தோட்டம், கொல்லை; அமன்ற — செறிந்த; முழுமுதல் - அடிமரம்; உரும் - இடி; அருவி ஓசை. இடியோசை கேட்டாயோ என்றது- உறங்குகிறாளா விழித்துள்ளாளா என்பதை அறிவதற்காக. கொண்மு — கருமுகில்; ஒய்யும் - இழுக்கும்; சுழி — சுழல் ; நீத்தம் - வெள்ளம் ; புன்தலை — மெல்லிய தலை; பாந்தள் - பாம்பு; பாம்பின் படம் போல் தோன்றும் கள்ளிவகை.

"அம்ம வாழி தோழி நம்மலை
அமைஅறுத் தியற்றிய வெவ்வாய்த் தட்டையின்
நறுவிரை ஆரம் அறஎறிந் துழுத
உளைக்குரல் சிறுதினை கவர்தலின் கிளையமல்
பெருவரை அடுக்கத்துக் குரீஇ ஓப்பி
ஓங்கிருஞ் சிலம்பின் ஒள்ளிணர் நறுவீ
வேங்கையங் கவட்டிடை நிவந்த இதணத்துப்
பொன்மருள் நறுந்தா தூதும் தும்பி
இன்னிசை ஓரா இருந்தனம் ஆக,
"மையீர் ஓதி மடநல் லீரே
நொவ்வியற் பகழி பாய்ந்தெனப் புண்கூர்ந்து
எவ்வமொடு வந்த உயர்மருப் பொருத்தல்நும்
புனத்துழிப் போகல் உறுமோ மற்றெனச்
சினவுக்கொள் ஏமலி செயிர்த்துப்புடை யாடச்
சொல்லிக் கழிந்த வல்விற் காளை
சாந்தார் அகலமும் தகையும் மிகநயந்து
ஈங்குநாம் உழக்கும் எவ்வம் உணராள்
நன்னர் நெஞ்சமொடு மயங்கி வெறியென
அன்னை தந்த முதுவாய் வேலவன்
"எம்மிறை அணங்கலின் வந்தன்று இந்நோய்
தணிமருந் தறிவல்" என்னு மாயின்
வினவின் எவனோ மற்றே, கனல்சின
மையல் வேழம் மெய்யுளம் போக
**ஊட்டி யன்ன** ஊன்புரள் அம்பொடு

25. காட்டுமான் அடிவழி ஒற்றி
வேட்டம் செல்லுமோ நும்மிறை எனவே."

-இது, இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைவன் வரத், தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

**இதன்பொருள் ;**

"தோழி, கேட்பாயாக! நம் மலையில் வளர்ந்த மூங்கிலை வெட்டிச் செய்த வலிய ஓசையுடைய தட்டைப் பறையால், நறுமணமிக்க சந்தன மரத்தை வெட்டி உழுது விதைத்த தினை, குதிரையின் பிடர் போல் கதிர் விளைந்ததாகக் குருவிகளை வெருட்டுதற்கு நாம், கரிய வேங்கைமரத்தின் கிளைமேல் அமைந்த பரணில் இருந்தோம். அப் பொழுதில் சந்தனம் அணிந்த மார்பனாய் வந்த காளை போன்றவன் கரிய மெல்லிய கூந்தலையுடைய மெல்லியல் உடையீர், எம் விரைந்த அம்பு தாக்குதலால் புண்பட்டு வந்ததாம் யானை ஒன்று உங்கள் தினைப் புனத்து வந்ததோ என வினவி சீறிய நாய்களை அடக்கிய தோன்றலை நினைத்து நாம் வருந்துகின்றோம். ஆனால், அன்னை இது வேலனால் வந்தது என வெறியாட்டு எடுத்து அவன் 'எம்மால் தீரும் நோய் இது' என்றால், அவனிடம் "நெருப்பன்ன சினத்தொடு யானை மேய்தற்குப் புனத்து வந்தால், ஊன் தசையொடு குருதிபடிந்த அம்பொடு அவ் யானையை வேட்டையாடுதற்கு உன் இறை செல்லுமோ? என்று கேட்டால் என்ன" என்றாள். வெறியாட்டு எடுக்கும் துயர் நேரிட்டமையால் இன்னும் தாழாது வரைந்து கொள்ள முயல்க என்று தலைவன் கேட்ப உரைத்தாளாம் தோழி என்க.

தோழி கூர்த்த மதியள் களவை நீடிக்க விடாமல் கற்பறமாக்கி இல்லறம் புகுத்தலே நோக்காகச் செயல்படுவாள். அதற்குத்தகத் தானே வருவித்தும் சொல்வாள்; நிகழ்வும் சொல்வாள். இடை இடை தடை செய்து ஆவலைத் தூண்டி அறம் காப்பாள். அந்நிலையில் சொல்வது இதுவாம்.

# காப்பிய உவமைகள் : ஹோமர், மில்டன், சங்கச்சான்றோர்

பேராசிரியர் ப. மருதநாயகம்,
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை – 600 113.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேய அறிஞராகிய ஜான்சன், உவமையின் இரு பயன்கள் என்று சான்றாகிப் புலப்படுத்தல் (illustration), அணிசெய்தல் (Ornamentation) ஆகியவற்றைக் குறித்தார். அவருக்கும் எட்டு, ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே, தொல்காப்பிய உரையாசிரியராகிய இளம்பூரணர், "புலனல்லாதன புலனாக்கலும், அழகிய பொருளாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும்" உவமையின் தொழில்கள் என்று புலப்படுத்தியுள்ளார். இருபதாம் நூற்றாண்டு மேலைக் கல்வியாளர்கள் உவமை தன் பணியைச் செவ்வையாகச் செய்தற்கு ஏற்ற வண்ணம் நமது அன்றாட வாழ்விலிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டுமென்றும், இல்பொருள் உவமைகளும் இயற்கையிகந்த நிகழ்ச்சிகளும் தவிர்க்கப்படவேண்டுமென்றும் கூறுவர். இத்தகைய அளவுகோல்களைக் கொண்டு, சேக்ஸ்பியர் கையாண்டுள்ள உவமைகள் பாராட்டப்பெறும்; மில்டனும், ஷெல்லியும் பயன்படுத்தியுள்ள உவமைகள் பல கண்டிக்கப் பெறும். சேக்ஸ்பியர் காலத்து இங்கிலாந்தில் கரடியைத் துன்புறுத்தல் (Bear baiting) என்னும் விளையாட்டு அங்கு வாழ்ந்த மக்களால் பெரிதும் விரும்பப்பட்டதாகும். கரடியை ஒரு தூணில் கட்டி விட்டு அதனை நாய்களால் கடிக்கச் செய்வர். கரடி ஏதும் செய்ய இயலாது துன்புறும் காட்சியைக் கண்டு மகிழ்வர்!. இதனை ஓர் உவமையாகப் பன்னிரெண்டாம் இரவு (Twelfth Night) எனும் நாடகத்தில் சேக்ஸ்பியர் பாத்திரத்திற்கும் சூழலுக்கும் பொருந்தும் முறையில் பயன்படுத்திக் கொள்கிறார். ஆனால் அவர்காலத்துப் பிற நாடக ஆசிரியர்கள் யாரும்

பெருங்கல்வியாளர்களாக இருந்தும் அதனைக் கண்டுகொள்ளவில்லை. பல்கலைக் கழகக் கல்வி பெற்ற அவர்களெல்லாம் கிரேக்க, ரோமானியத் தொன்மங்களிலிருந்து தங்கள் உவமைகளை எடுத்துக்கொண்டனர். அவை நாடகம் பார்ப்போரிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த இயலாமல் தோல்வியடைந்தன. மில்டனின் காட்சியுருக்கள் (images) இனிய ஓசை கொண்ட சொற்களால் அமைந்து காதிற்கு இன்பம் அளிப்பவை; ஓவியமாகிக் கண்ணிற்கு இன்பம் அளிப்பன அல்ல. ஷெல்லி தரும் காட்சியுருக்களெல்லாம் பருப்பொருள்களால் அல்லாமல், நுண்பொருள்களால் இயங்கி வலிய தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.

மேலை உலகில் புதுக்கவிதையின் முன்னோடிகளான ஹியூம் (Hulme), எஸ்ரா பவுண்டு (Ezra Pound), டி. எஸ். எலியட் (T.S.Eliot) போன்றோரெல்லாம் கவிதைக்குக் காட்சியுருக்களின் பங்கு உயர்ந்ததென்ற கருத்தை வற்புறுத்தினர். நூற்றுக்கணக்கான சந்த இனிமைகொண்ட, பொருளற்ற சொற்களைத் தொகுப்பதைக் காட்டிலும் கவிதை கூறவந்த பொருளைத் தெற்றென, மின்னல் வீச்செனப் புலப்படுத்தும் ஒரு காட்சியுருவைப் படைப்பது சிறப்பானது என்பது எஸ்ரா பவுண்டின் அறிவுரை. சங்கச் சான்றோர் பாடல்களில், குறிப்பாக அவ்வையார் பாடல்களில், இத்தகைய காட்சியுருக்கள் மலிந்து கிடப்பது அன்னார்க்குத் தெரியாமல் போனது வருந்தற்குரியது. கவிதையில் உவமையின் பணி பற்றித் தொல்காப்பியர் நன்கு அறிந்திருந்தார் என்பதற்கு அவர் இறைச்சி, உள்ளுறை, ஏனை உவமம் பற்றிக் கூறுகின்ற நூற்பாக்களால் அறியலாம். தொல்காப்பிய - சங்க இலக்கிய மரபு கட்புலனைத் தாக்கும் காட்சியுருக்கள் (Visual images) எவ்வளவு ஆற்றலுடையவை என்பதைத் தெளிவாக்கும். உவமைகளையும், உருவகங்களையும் தேர்ந்தெடுக்கும்போது கவிஞன் தன் கவிதையில் வரும் பாத்திரத்தின் தன்மை, நிலை, அது வாழும் சூழல், அதன் செயல்பாடுகள் ஆகிய யாவற்றையும்

கருத்தில் கொண்டிருக்கவேண்டும் என்பதைத் தொல்காப்பியர் எடுத்துரைப்பது வியப்புக்குரியது. ஹோமரும், மில்டனும் போற்றப்படுவதற்குக் காரணமான காப்பிய உவமைகள் (epic similes) சங்க இலக்கியங்களில் பெருவாரியாகக் காணக்கிடைப்பது அதனினும் வியப்புக்குரியது.

ஹோமரின் இலியத் (Iliad), ஒதிசி (Odyssey) காப்பியங்களில் ஆழங்கால் பட்ட திறனாய்வாளர்கள் அக்கவிஞருடைய உவமைகள் வெறும் அழகுக்காக மட்டுமல்லாமல், பொருளை விளக்குவதோடு மட்டுமல்லாமல், ஒரு நாடக நிகழ்ச்சியையே படம்பிடித்துக்காட்டுவனவாய் அமைந்துள்ள சிறப்பைச் சுட்டிக் காட்டுவர். ஒப்பீட்டோடு நின்றுவிடும் உவமைகளைவிட, ஒப்பீட்டுக்கும் மேல் சென்று நாடகக் காட்சிகளாகும் உவமைகள்ஹோமரது தனியாற்றலை உறுதிப்படுத்தும். "மதில்சுவர்மேலிருந்து போர்க்களத்தைக் காணுதல்" (Watching on the Walls) என்னும் பகுதியில், டிராய் நாட்டு மன்னன் பிரியம் என்பானும் மூத்தகுடிமக்கள் சிலரும் கிரேக்க வீரர்களைக் கண்டு அவர்களைப் பற்றிய உரையாடலில் ஈடுபடுகின்றனர். அன்னார்க்குக் கூறும் உவமை ஒப்பீட்டளவில் நின்றுவிடுகிறது.

> இப்பொழுது அவர்கள் அகவை முதிர்ந்து விட்ட
> காரணத்தால் போர்களில் ஈடுபடுவதில்லை;
> ஆனால் இன்னும் அவர்கள் பேச்சில் வல்லவர்கள்
> காட்டில் மரங்களில் படர்ந்து, பெருங்குரல் எழுப்பி
> இசைபாடும் சில்வண்டுப் (Cicada) பூச்சிகளைப் போன்று
> அவர்கள் பேசியது தெளிவாக இருந்தது. மதில்மேலிருந்த
> டிராய் நாட்டு மூத்த மனிதர்கள் அவ்வாறு தோன்றினர்.
> (III 150 – 53)

ஒப்புமைக்குத் தேவையான கூறுகள் மட்டுமே பொருளைப் பற்றியும் உவமைகளைப் பற்றியும் சொல்லப்பெறுகின்றன. இன்னொரு இடத்தில், மன்னன் பிரியம் கிரேக்க வீரனான யுலிசிசை (Ulysses) செம்மறியாட்டுக்கடாவோடு ஒப்பிடுவான்.

ஏராளமான செம்மறியாட்டுக் கூட்டங்களையொத்த வீரர்களிடையே விரைந்து வழியேற்படுத்திச்செல்லும்

அவனை நான் உண்மையாகவே ஒரு முரட்டுத்
தோல் கொண்ட செம்மறியாட்டோடு ஒப்பிடுவேன்
(III 197 – 98)

இதிலும் பொருள் பற்றியோ, உவமைபற்றியோ தேவைக்கு அதிகமான செய்திகள் சொல்லப்படவில்லை.

ஹோமருடைய காப்பியத்தின் நான்காம் பகுதியில் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சியிலிருந்து எடுக்கப்பட்ட உவமை யொன்று வருகின்றது. அதீனி (Athene) எனும் பெண் தெய்வம் ஒரு போர்த் தலைவனைக் காக்க, அவனைத் தாக்க வரும் அம்பைத் தடுத்து அப்பால் செல்லும் காட்சி:

இனிய துயிலில் இருக்கும் குழந்தையை மொய்க்க
வரும் ஈயை அதன்தாய் கையால் விரட்டி விடுவதைப்
போன்று அவன் தோளில் பதியவந்த அம்பை அவள்
மிக எளிதாக அப்புறப்படுத்தினாள் (IV 130 – 31)

ஒருபெரும் படை எழுப்பும் ஆரவாரம், மிகுதியும் கையாளப்படும் உவமையால் விளக்கப்படுகிறது.

பேரொலி யெழுப்பும் கடலின் அலையொன்று அகன்ற
கரையைத் தாக்கி முழுங்குதல்போல், கடல்
இடியென ஆர்ப்பரிப்பது போல், அப்போர்வீரர்கள்
கூட்டம் நடைபெற விருக்கும் இடத்திற்கு விரைந்தனர்
(II 221 – 224)

அகிலெஸ் (Achilles) எனும் மாவீரன் தனது அவல நிலையைச் சுட்டிக்காட்ட ஓர் அழகிய உவமையைக் கையாளுகிறான்.

ஒருபறவை இரை கிடைத்த போதெல்லாம் அதனைக்
கொண்டு வந்து தனது குஞ்சுகளுக்குக் கொடுத்து

> விட்டுத் தான் பட்டினி கிடந்து வாடுவது போல்,
> பலஇரவுகள் தூக்கமின்றிக் காத்திருந்து
> பலகொடிய நாட்கள் போரிட்டேன் (IX 340 - 44)

இவ்வுவமைகளெல்லாம் ஒப்புமைக் கூறுகளைத் தொட்டுக் காட்டுவதோடு நின்றுவிடுகின்றன. ஆனால் ஹோமருக்கே உரியன என்று கருதப்பட்ட காப்பிய உவமைகளில் பொருள் சுட்டப்படும், உவமை நீண்டு வளர்ந்து செல்லும். காப்பியத்தின் பதினாறாம் பகுதியில், பெட்ராக்ளஸ் (Patroclus) தலைமையில் போரிடும் வீரர்கள் கொட்டும் குளவிகளுக்கு ஒப்பிடப்படுகிறார்கள்.

> அவ்வீரர்கள் பெருங்கூட்டமாகப் பகைவர்கள் மேல்
> வீழ்ந்த போது குளவிகளை ஒத்திருந்தார்கள்.
> சாலையோரத்தில் கூடு கட்டியிருக்கும் குளவிகளைச்
> சிறு பையன்கள் எப்பொழுதும் சீண்டுவார்கள்;
> துரத்துவார்கள்.
> அவை பலருக்கும் தொல்லை கொடுப்பவை;
> வழிப்போக்கர் யாரேனும் தெரியாத்தனமாக அவற்றிக்கு
> இடையூறு செய்தால் அவை தற்காப்பு உணர்வோடு
> அவர்களைத் தாக்கும்; ஒவ்வொரு குளவியும் தனது
> பிள்ளைகளைக் காப்பதற்காகப் பறந்து பறந்து
> போராடும். அவற்றை ஒத்த உள்ளத்தோடும்
> வெறியோடும் அவ்வீரர்கள் கப்பல்களிலிருந்த
> போர்வீரர்கள் மேல் பாய்ந்தார்கள் (XVI 259 – 67)

கடுஞ்சினம் கொண்ட போர்வீரர்கள் அரிமாக்களுக்கோ, புலிகளுக்கோ ஒப்பிடப்படாமல் சீண்டப்பட்ட குளவிகளுக்கு ஒப்பிடப்படுகிறார்கள்! இந்த உவமை, குளவிகளின் வாழ்க்கையையே படம்பிடித்துக் காட்டுகிறது. இலியத் காப்பியத்தில் இத்தகைய வாழ்விலிருந்து எடுக்கப்பட்ட நாளும் நாம் காணும் காட்சிகள் அரிய உவமைகளாகின்றன. இவை வீரர்களின் உலகைச் சார்ந்தவை அல்ல. அவற்றிலிருந்து

மிகவும் வேறுபட்டவை. இளஞ்சிறார்கள் கழுதைகளை அடிப்பது, பால் பாத்திரத்தை ஈக்கள் மொய்ப்பது, சிற்றூர் மாந்தர் அவர்களுடைய வயல்களின் எல்லைகளுக்காக வாதிடுவது, பெண்கள் தந்தத்திற்கு வண்ணம் தீட்டுவது போன்ற காட்சிகளெல்லாம் உவமைகளாக மிளிரக் காணலாம்.

விரிவாக்கம் செய்யப்பட்ட இரட்டை உவமைகளையும் ோமர் பயன்படுத்துவார்.

ஐகோரியன் கடலின் பேரலைகள் கிழக்கிலிருந்தும்
தெற்கிலிருந்தும்
வீசும் காற்றால் சிதறுவது போல் அப்போர் வீரர்களின்
கூட்டம்
தந்தை சேயசின் மேகங்களால் கலைக்கப்பட்டது.
அல்லது, மேலைக்காற்றின்
அதிரடித் தாக்குதலால் வயலிலுள்ள மணிகள்
நிறைந்த செடிகள் அலைப்புறுவது போல் அக்கூட்டம்
அதிர்ச்சிக்குள்ளானது (II 150 – 57)

வேண்டும் பொழுது ஓர் எளிய உவமையை அடுத்து ஒரு காப்பிய உவமையும் தரப்படலாம்.

பெட்ராக்ளசு, மக்களின் இடையனாகிய அகிலெசின்
அருகில் நின்று
கொண்டு கண்ணீர் விட்டு அழுதான். அவன்
அழுவது கருநிற நீர் கொண்ட ஊற்று, ஒரு
குன்றின் மேல்
அதன் நீரைச்சொரிவது போன்றிருந்தது, விரைந்து
செல்லும் கால்களைக் கொண்டவனும், தெய்வத்
தன்மை பொருந்தியவனுமாகிய அகிலெசு அவனைக்
கண்டு இரக்கமுற்று, இறக்கை கொண்ட சொற்களைச்
சொன்னான்! பெட்ராக்ளசு "ஏன் அழுகிறாய்?

> சிறுபெண்ணொருத்தி, தாயின் பின்னால்
> ஓடி, அவளது ஆடையைப் பற்றிக்கொண்டு
> அவளை விரைந்து செல்லமுடியாமல் தடுத்து,
> கண்களில் நீர்மல்கப் பார்த்துத் தன்னைத் தூக்கிக்
> கொள்ளச் சொல்வதுபோல், கண்ணீர் வடிக்கும் நீ
> காட்சி தருகிறாய்" (XVI 2 – 11)

ஒரு நீண்ட உவமையில் ஒதீசியசின் இதயம் நாய்க்கு ஒப்பிடப்படுகிறது,

அவனது உள்ளம் கடுஞ்சினத்தால் ஊளையிட்டுக்
கொண்டிருந்தது, புதியவனொருவனைக் கண்டவுடன்
ஒரு நாய் தனது அச்சங்கொண்ட குட்டிகளை அரவணைத்துக்
கொண்டு, அவனோடு போரிடத் தயாராகிக் குரைப்பது
போன்று, அவனது மனம் அவர்களுடைய தீச்செயல்
களைக்கண்டு, பதற்றத்தோடு குரைத்தது (XX 15 – 18)

நொந்த உள்ளம்கொண்ட ஒதீசியசு, இன்னொரு நீண்ட உவமையில் ஊன்துண்டொன்றைப் பெருநெருப்பில் வாட்டும் ஒருவனது செயலோடு இணைத்துப் பேசப்படுகிறான்.

> அவன் இவ்வாறு தனக்குள்ளே பேசிக்கொண்டான்
> அவனது உள்ளம் அவனுக்குக் கட்டுப்பட்டு அச்சமும்
> கலக்கமும் அற்று அமைதியுற்றது. ஆனால் அவனோ
> படுக்கையில் அப்புறமும் இப்புறமும் புரண்டு புரண்டு
> படுத்துக்கொண்டிருந்தான். கொழுப்பும் குருதியும்
> கொண்ட கொத்துக்கறியை எரியும் தீயிலிட்டு இப்படியும்
> அப்படியும் புரட்டி விரைவாக வாட்டுவதைப் போல்,
> அவன் உறக்கமின்றித் தவித்துப்புரண்ட காட்சி இருந்தது
> (XX 26 – 32)

தொடரும் .. .. ..

# தொடரியல் கோட்பாடு

பேராசிரியர் **செ. வை. சண்முகம்,**
மொழியியற்புலம் (ப. நி. ),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
கைபேசி : 9865196476

## முன்னுரை

தொடர் என்பது கலைச்சொல்லாய் தொகை, தொடர், வாக்கியம் ஆகிய மூன்று வகைகளைக் குறிக்கும். எனவே தொடரியல் என்பது தொகை, தொடர், வாக்கியம் ஆகிய மூன்றின் மொழி அமைப்பைச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு விளக்குவது.

## தொகை

பொதுவாகத் தொகை என்பது குறைந்த அளவு இரண்டு சொற்கள் சேர்ந்து வருவதே. மரக்கிளை, கொல் களிறு, பச்சைப் பாம்பு, ஆடுமாடு முதலியன. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களும் சேர்ந்து தொகையாக அமையும். சேர சோழ பாண்டியர், இயல் இசை நாடகம் = 3 சொல். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் = 4 சொல். அவை எண்ணிக்கையில் குறைவே. அவைகளின் பொதுப் பண்பு தொடரியல் நோக்கில் ஒரு சொல் நீர்மைத்தாகச் செயல்படும் என்பது. சேர சோழ பாண்டியர் = மூவேந்தர், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் = திணை.

தொகை என்பது பெரும்பான்மையும் இரண்டு சொல் ஒரு பொருளைக் குறிப்பதாய் ஒரு சொல் போலச்செயல் செயல்படுவது. அவைகளும் பல வேறு இலக்கண உறவு உடையவைகளே. மரக்கிளை = மரத்தின் கிளை எனவே ஆறாம் வேற்றுமைத் தொகை. கத்தி வெட்டு என்பது கத்தியால் ஏற்பட்ட வெட்டு என்ற பொருள் உணர்த்துவதால் முறையில் மூன்றாம் வேற்றுமை என்ற பெயர் பெறும். ஆடு மாடு என்பது ஆடும் மாடும் என்பதாம் உம்மைத் தொகை எனப்படும்.

தொகை ஒரு சொல் போலச் செயல்படும் (ஒரு சொல் சீர்மைத்து). அது மரக்கிளை ஒடிந்தது (எழுவாய்), மரக்கிளையை ஒடித்தேன் (செயப்படுபொருள்) மரக்கிளையில் குருவி இருந்தது (இடம், ஏழாம் வேற்றுமை). மரக்கிளை என்பது மரத்தினுடைய கிளை என்று பொருள்படுவதால் ஆறாம் வேற்றுமைத் தொகை என்று பெயர் பெறும்.

புற நிலையில் தொகை என்பது ஒரு சொல் போல இருந்தாலும் அவைகளின் இலக்கண உறவு மாறுபடுவது தொடரியல் நோக்காக அமைந்து பல வகைப்படுகிறது.

## தொடர்

தொடர் என்பதும் குறைந்த அளவு இரண்டு சொல்லாலும், நிறைந்த அளவு இரண்டுக்கும் மேற்பட்ட சொற்களாலும் அமையும். அவைகளுக்கிடையே உள்ள இலக்கண உறவுகள் மாறுபடலாம்.

இரண்டு சொற்களில் சில, தொகையாகவும் தொடராகவும் செயல்படும். பச்சை பாம்பு என்பது ஒரு வகை பாம்பைக் குறிக்கும்போது ஒரு தொகை. அது பாம்பில் என்ற சொல்லில் ஒலி அழுத்தம் பெறும். பச்சைப் பாம்பு என்பது பச்சை நிறத்தில் உள்ள பாம்பு என்று பொருள்படும்போது ஒரு தொடர். பச்சை என்பதில் ஒலி அழுத்தம் பெறும். மேலும் தொகையாக அமையும்போது வேறு சொற்களை இடையில் சேர்க்கமுடியாது. தொடராக அமையும்போது நடுவில் சொற்களை இணைக்கலாம். பச்சை பெரிய பாம்பு என்றும் கூறலாம்.

ஒரு தொடரின் அமைப்பும் பேசுவோர் கருத்துக்கு ஏற்ப மாறுபடலாம். பார்த்த மாணவர் என்ற தொடர் அதாவது பெயரெச்சத் தொடர். அதுவே இரண்டு பொருள்படும். நான் பார்த்த மாணவர் என்றும் என்னை பார்த்த மாணவர் என்று அமையும் போது, மாணவர் யார் என்ற பொருள் மாறுபடுகிறது. மேலும் நான் போய்ப் பார்த்த மாணவர் என்றும் என்னை வந்து பார்த்த மாணவர் என்று கூறலாம். ஆனால் *நான்

வந்து பார்த்த மாணவர், *என்னைப் போய்ப்பார்த்த மாணவர் என்று கூறுவது இல்லை. எனவே இரண்டு சொல் தொடர் ஆனாலும் எழுவாய் பெயருக்கும் பயனிலை பெயரெச்சமும் மாறுபட்ட இலக்கண உறவு உடையவை. முன்னது கருத்தா (நான் பார்த்த அல்லது எழுவாய், பின்னது செயப்படு பொருள் (என்னைப் பார்த்த இலக்கண உறவு உடையது. எனவே தொடரில் சொற்கள் சேர்க்கையோடு அவைகளின் இலக்கண உறவும் (grammatical relations) அறியப்பட வேண்டும். வேற்றுமை, பெயரெச்சம், வினையெச்சம், அடை (Attribute) போன்றவை இலக்கண உறவுகள்.

**வாக்கியம்**

வாக்கியம் என்பது பல தொடர்களை உள்ளடக்கிய ஓரளவு கருத்துபொருள் முற்றுப்பெற்றது. அது தனித்த கட்டமைப்பு. இன்னொரு தொடரோடு தொடர்பு இல்லாதது. அது ஒரு கிளவி (utterance). வாக்கியமும் குறைந்தது இரண்டு சொற்களாலும் அமையலாம் (நான் மாணவன்). சிலர் ஒரு பத்தியை ஒரு வாக்கியமாக அமைப்பார். எனவே அதன் அதிக அளவை வரையறுக்க முடியாது.

மொழியின் பேச்சு என்பது தொடர்ந்து சொற்களைப் பேசுவதுதான், ஆனால் அந்த சொற்களுக்கு இடையே உள்ள உறவு பேசுவோர் எண்ணத்தையும் கேட்போர் நோக்கத்தையும் பொறுத்தது.

மூன்று சொற்கள் அமைந்த தொடரில் சொற்களின் இலக்கண உறவு அடிப்படையில் பொருள் மாறுபடும். பழைய மாணவர் விடுதி என்பது மூன்று சொற்கள் கொண்ட தொடர். ஆனால் அது பழைய + மாணவர் விடுதி என்ற பொருளும் (மாணவர் விடுதி பழையது) பழைய மாணவர் + விடுதி என்ற பொருளும் (பழைய மாணவர்களுக்கான விடுதி) அமையும். பொருள் மாற்றத்துக்குள் காரணம் அவைகளின் மாறுபட்ட இலக்கண உறவே. பழைய + மாணவர் விடுதி என்பது பெயரடை

+ பெயர்த் தொடர் என்ற இலக்கண உறவு உடையது. பழைய மாணவர் + விடுதி என்பது பெயரடைத் தொடர் + பெயர் என்ற இலக்கண உறவு உடையது. எனவே பொருள் மாறுபடுவதற்கு இலக்கண உறவு மாறுபாடே காரணமாக அமைகிறது.

**அடிப்படைக் கருத்துகள்**

1) வாக்கியத்தில் சொற்கள் அல்லது தொடர், இலக்கண உறவு அடிப்படையில் செயல்படுகின்றன.

2) அவை மாற்றீட்டுமுறையால் (substitution method) முடிவு செய்யலாம். மரக்கிளை = அது, பார்த்த மனிதர் = அவர்.

3) அந்தத் தொடரின் செயல்பாட்டை ஒட்டி அதாவது இலக்கண உறவை ஒட்டி அந்தத் தொடருக்குப் பெயரிடப்படும். பெயர்த்தொடர் (ஆடு மாடு, பூரிக் கிழங்கு)

வினைத் தொடர் (ஓடியாடு, கொண்டு கொடு(த்து), பெயரெச்சத் தொடர் (படித்த நூல்), வினையெச்சத் தொடர் (படித்துச் சொல், படித்தால் வெற்றி பெறலாம்), வேற்றுமைத் தொடர் (நூலைப்படி, கையில் கொடு) என்று பெயரிட்டுக் குறிப்பிடப்படும்.

4) செயல்பாட்டை ஒட்டி எழுவாய்த் தொடர், பயனிலைத் தொடர் என்றும் பெயரிடலாம்.

5) அந்தத் தொடரின் அமைப்பைச் சொல்லியல் நோக்கில் விளக்க வேண்டும்.

உதாரணம் :

ஆசிரியர் வந்தார் = வாக்கியம், செயப்படுபொருள் குன்றிய வினை

ஆசிரியர் குறளைப் படித்தார் = வாக்கியம், செயப்படுபொருள் குன்றா வினை வாக்கியம். இவை எளிய (simple) வாக்கியங்கள்.

ஆசிரியர் குறளைப் பாடி பாடம் நடத்தினார். இதில் பாடி என்ற வினையெச்சம் இருப்பதால் கலவை (complex) வாக்கியம். ஆனால் 'ஆசிரியர் குறளைப் பாடினார், பாடம் நடத்தினார்' என்பதால் பாடுதல், நடத்துதல் என்ற இரண்டு வினைகள் அமைந்துள்ளன. அதனால் அது வினையெச்சத் தொடர்.

ஆசிரியர் நேற்று காலை நடத்திய பாடம் மகிழ்ச்சியாக இருந்தது. இது புற நிலையில் எளிய வாக்கியமே. ஆனால் புதைநிலையில் அதுவும் இரண்டு வாக்கியமே. ஆசிரியர் நேற்று காலை பாடம் நடத்தினார், அது மகிழ்ச்சியாக இருந்தது என்பது பொருள்.

6) புறநிலையில் அடுத்து அடுத்து வரும் சொற்கள் உறவுநிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையில் அமையும். மேலே காட்டிய பழைய மாணவர் விடுதி தொடர்நிலை உதாரணம்.

அந்தப் பெரிய மனிதர் தம்பியைப் பாராட்டினார் என்ற வாக்கியம்

அந்தப் பெரிய மனிதர் + தம்பியைப் பாராட்டினார் = பெயர்த்தொடர் + செயப்படுபொருளால் தொடரால் ஆன வினைத் தொடர்.

அந்தப் பெரிய மனிதர் தம்பியைப் + பாராட்டினார் = செயப்படுபொருள் செயப்படுபொருள் தொடர் + வினைத் தொடர்.

அதாவது 'தம்பியை' என்ற சொல் எதன் உறுப்பாக அமைகிறது என்பதைப் பொறுத்து பொருள் மாறுபாடு.

**7) அண்மை உறுப்பு ஆய்வு**

சொற்கள் தொடர்களாக அமையும் முறை ஆய்வு, அண்மை உறுப்பு ஆய்வு (immediate constituent Analysis) என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது அடுத்து வரும் சொற்களின் வரிசை அதாவது அண்மை நோக்கில் இல்லாமல் இலக்கண உறவு நோக்கில் முடிவு செய்யப்படும்.

அது ஒரு தொடரியல் கோட்பாடு. அது இந்த நூற்றாண்டில் முதல் பகுதியில் முன்மொழியப்பட்டு பின்னர் செம்மை செய்யப்பட்டது.

இன்று அது விளக்கமுறை மொழியியல் (descriptive linguistics) அல்லது அமைப்பியல் மொழியியல் (structural linguistics) என்பதன் பகுதியாகக் கருதப்படுகிறது.




சில தொடர்களில் அடுத்து இருக்கும் சொல்லோடு தொடரியல் உறவு அமையாது முன்னோ பின்னோ உள்ள சொல் அல்லது தொடரோடு தொடரியல் உறவு அமைவதும் உண்டு.

அது சொல்லிருந்து தொடர் வாக்கியம் உருவாகும் முறையை ஒட்டியது. அது தொடரமைப்பு விதிகள் (Phrase structure rules) என்று குறிப்பிடப்படும்.

8) அண்மை உறுப்பாய்வு வாக்கியத்தின் புற அமைப்பையே ஆராயும். மேலும் வாக்கியங்களுக்கு இடையே தொடர்பு பற்றிக் கருத்து செலுத்தாது.

ஆசிரியர் + குறளைப் பாடி + பாடம் நடத்தினார் என்ற முறையில் விளக்கும்.

ஆசிரியர் குறளைப் பாடி பாடம் நடத்தினார்.

ஆசிரியர் குறளைப் பாடியா பாடம் நடத்தினார்.

ஆசிரியர் குறளையாப் பாடி பாடம் நடத்தினார்.

என்ற வாக்கியங்கள் பொருள் தொடர்பு உடையன. பின்னவை வினா வாக்கியங்கள். முன்னது செய்தி வாக்கியம்.

ஆசிரியர் + குறளைப் பாடி + பாடம் நடத்தினார்.

குறளைப் பாடி + ஆசிரியர் + பாடம் நடத்தினார்

குறளைப் பாடி + பாடம் நடத்தினார் + ஆசிரியர்

என்று மொழி மாற்றம் செய்வதும் இயல்பானதே. உண்மையில் தொடரியல் கருத்தோடு பேசுவோர் உணர்வும் கலந்துள்ளது. தொடரியல் அது பற்றிக் கருத்து செலுத்தாது. அதே சமயத்தில் அவைகளுக்கு இடையே உள்ள உறவு தொடரியல் நோக்கில் விளக்கப்பட வேண்டும்.

நோம் சாம்ஸ்கி என்பார் வாக்கியங்களுக்கு இருக்கும் பொருள் உறவு அடிப்படையில் மாற்றிலக்கணக் கோட்பாடு (Transformation) என்ற புதிய கோட்பாட்டை உருவாக்கியுள்ளார். அவருடைய முதல் நூல் Syntactic structures (தொடரியல் அமைப்புகள், 1957) வெளிவந்தது. அவருடைய இன்னும் சில நூல்களை அந்தக் கோட்பாட்டு அடிப்படையில் எழுதியுள்ளார். வேறு சிலரும் அந்தக் கோட்பாட்டில் சில நுண்ணிய திருத்தங்களை முன்மொழிந்து இன்று மொழியியலில் ஒரு உலகளாவிய கோட்பாடாக உருப்பெற்றுவிட்டது. தமிழிலும் மாற்றிலக்கண கோட்பாடு பற்றிய நூல்கள் வந்துள்ளன (உதாரணம், அரங்கன், 1985).

9) மாற்றிலக்கணக் கோட்பாடு வாக்கியத்திலிருந்து தொடர்களாக, சொற்களாகப் பிரிகிற முறையை விளக்குவது. மாறாக அண்மை உறுப்பாய்வு சொல்லிலிருந்து வாக்கியத்தை விளக்குவது. அதனால் பட விளக்கமும் மாறுபடுகிறது. மாற்றிலக்கண முறை:

வாக்கியம் -----> பெயர்த் தொடர் (பெதொ) + வினைத்தொடர்

பெதொ -----> பெயரடை + பெ.

விதொ -----> விதொ + பயனிலை.

என்ற தொடரியல் விளக்கமும் அமையும்




## 10) வாக்கியங்களும் அவைகளின் தொடர்பும்

மொழி பேச்சு என்பதால் அதில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள் அமையும். எனவே தொடரியலில் வாக்கியங்களும் அவைகளுக்கு இடையே உள்ள தொடர்பும் விளக்கப்பட வேண்டும். மேலும் கலவை வாக்கியத்துள்ளும் இன்னொரு வாக்கியம் புதைந்திருப்பதாலும் வாக்கியங்களும் அவைகளின் தொடர்பும் விளக்கப்பட வேண்டும்.

11) அவை உம்மை, காரண காரியம், போன்ற பல உறவுகள் வாக்கியங்களுக்கு இடையே அமையும்.

ஒரு ஆசிரியர் தொல்காப்பியம் நடத்தினார்.

இன்னொரு ஆசிரியர் திருக்குறள் நடத்தினார்.

அவை உம்மை வாக்கியங்கள். அவைகளை ஒரு ஆசிரியர் தொல்காப்பியமும் இன்னொரு ஆசிரியர் திருக்குறளும் நடத்தினார்கள் என்று தனி வாக்கியமாகவும் மாற்றி அமைக்கலாம். அது மொழி மாற்று (transformation) என்று குறிப்பிடப்படும்.

நேற்று நல்ல மழை பெய்தது. அதனால் தெருவெல்லாம் வெள்ளம் ஏற்பட்டது. அவை காரண காரிய தொடர்பு உடைய வாக்கியங்கள். அவைகளை 'நேற்று நல்ல மழை பெய்ததால் தெருவெல்லாம் வெள்ளம் ஏற்பட்டது' என்று ஒரு கலவை வாக்கியமாகவும் அமைக்கலாம். அது ஒரு வகை மொழி மாற்று ஆகும்.

12) மேலும் ஒரு வாக்கியமே இன்னொரு வாக்கியத்தின் மாற்றுவடிவமாகவும் அமையும். அதாவது ஒரு வாக்கியம் இன்னொரு வாக்கியத்தோடு செய்வினை /செயப்பாட்டு வினை, வினா, சுட்டு முதலிய உறவுகளும் அமைந்திருக்கும்.

**செய்வினை /செயப்பாட்டு வினை**

'வள்ளுவர் குறளை மதுரையில் அரங்கேற்றினார்' என்பது செய்வினை வாக்கியம்.

'குறள் வள்ளுவரால் மதுரையில் அரங்கேற்றப்பட்டது' என்பது செயப்பாட்டு வினை வாக்கியம். அதாவது ஒரு கருத்து இரண்டு வகையில் இரண்டு மொழி அமைப்பில் கூறுவது மொழியில் இயல்பானதே. இதுவும் தொடரியல் நோக்கில் மொழி மாற்றே.

அதைத் தொடரியல் நோக்கில் பொதுமைப்படுத்தி விளக்கமுடியும். வள்ளுவர் குறளை மதுரையில் அரங்கேற்றினார் = எழுவாய் + செயப்படு பொருள் + இடவேற்றுமை + (செய்வினை) பயனிலை என்பது தொடரியல் அமைப்பு.

1. எழு -----> மூன்றாம் வேற்றுமை
   (வள்ளுவர் - வள்ளுவரால்)

2. செயப்படு -----> எழுவாய் (குறளை – குறள்)

3. செய்வினை -----> செயப்பாட்டு வினை (அரங்கேற்றினார் அரங்கேற்றப்பட்டது.

**வினா வாக்கிய மொழி மாற்று.** அதன் தனிச் சிறப்பு ஒவ்வொரு தொடரையும் வினாவாக மாற்றமுடியும்.

வள்ளுவர் குறளை மதுரையில் அரங்கேற்றினார் -----> வள்ளுவர் குறளை மதுரையிலா அரங்கேற்றினார்?

வள்ளுவர் குறளையா மதுரையில் அரங்கேற்றினார்.

வள்ளுவரா குறளை மதுரையில் அரங்கேற்றினார்.

வள்ளுவர் குறளை மதுரையிலா அரங்கேற்றினார்.

சுட்டு மொழி மாற்று.

வள்ளுவர் குறளை மதுரையில் அரங்கேற்றினார். அதனால் அவர் புலவர்களால் பெருமைப்படுத்தப்பட்டார். (அவர் = திருவள்ளுவர்).

மதுரையில் போன ஆண்டு படித்தேன். அப்போது நான் விடுதியில் தங்கியிருந்தேன் -----> மதுரையில் படித்த போது நான் விடுதியில் தங்கியிருந்தேன்.

13) மாற்றிலக்கண மொழியில் அடிப்படைக் கருத்துகளில் ஒன்று வாக்கியத்தின் புதைநிலை அமைப்பு (deep structure) புறநிலை அமைப்பு (surface structure) என்ற வேறுபாடு செய்வது.

14) புதைநிலை அமைப்பு என்பதன் அடிப்படை அமைப்பு. அதுவே பல வித மொழி மாற்றுகள் (transformations) பெற்று புறநிலை வாக்கியங்களாக மாறுகின்றன.

அதாவது பொருள் உறவு உடைய வாக்கியங்களுக்குள் ஒன்றே புதைநிலை அமைப்பு, மற்றவை ஆக்கங்கள் (derivatives) அல்லது மாற்றுகள் செய்யப்பட்டு உருவானவை.

15) மாறாகச் சொல்லியல் என்பது சொல்லின் அமைப்பை ஆய்வது என்று கொண்டாலும் மொழிஅமைப்பு நோக்கில் சொல்லியலுக்கும் தொடரியலுக்குமான எல்லைக் கோடு தெளிவாக அமையவில்லை. சொல்லியல் ஆய்வில் தொடரியல் கருத்துகளும் அமைந்துள்ளது அறியத் தகுந்தது. தமிழில் குறிப்பு வினை என்பது பெரு, சிறு, வல் முதலிய அடிச்சொற்களையும் பெயர்களையும் அடியாகக் கொண்டது. பெருந்தோளன் -----> பெரிய தோளை உடையவன் என்று பொருள். ஆறாம் வேற்றுமைப் பொருளையும் உணர்த்தும் சொல் என்பது ஒரு பெயர்த் தொடர்.

நான் மதுரையான் = நான் மதுரையில் இருக்கிறவன் என்று

ஏழாம் வேற்றுமை உடைய தொடரை அடிப்படையாகக் கொண்ட உண்டான வினை. அதாவது தொடரிலிருந்து உண்டான ஒரு வினை. அங்குள்ள பால் விகுதி கருத்தாவாய்ச் செயல்படுகிறது.

புறநிலையில் சொல்லியல் நிலையில் பெயர் + பால் உருபன் என்பது பொருள் நோக்கில் ஒரு வாக்கியத்தின் பிரதிபலிப்பாய் அமைகிறது.

அதுபோல் இரண்டாயிரத்து பதினெட்டில் முனைவர் பட்டம் பெற்றேன் என்னும் வாக்கியத்தில் உள்ள இரண்டாயிரத்து பதினெட்டு என்பது ஒரு தொடரோடு இல் என்ற ஏழாம் வேற்றுமை உருபு இணைந்துள்ளது. இங்குத் தொடரியலும் சொல்லியலும் இணைந்துள்ளது.

வாக்கியம் என்பது பல தொடர்களை உள்ளடக்கியது, ஓரளவு கருத்துபொருள் முற்றுப்பெற்றது.

படித்த மாணவர் என்று கூறும்போது அவரைப் பற்றி என்ன கூறப் போகிறார் என்ற எண்ணம் எழும். படித்த மாணவர் வந்தார் என்று கூறும்போது ஓரளவு கருத்து முடிவடைகிறது. 'என்னிடம் படித்த மாணவர் வந்தார்' என்னும் போதும் கருத்து முடிவடைகிறது அவை எளிய (simple) வாக்கியங்கள்.

'என்னிடம் படித்த மாணவர் நேற்று என்னைப் பார்க்க மதுரையிலிருந்து வந்தார்' என்னும்போது அது ஒரு கலவை (complex) வாக்கியம். அதில் மூன்று வினைச் சொற்கள் அடங்கியிருந்தாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயன்பாட்டை உடையது. படித்த என்பது பெயரெச்சமாக பெயரைத் தழுவியே வரும். பார்க்க (படிக்க என்பதும்) என்பது வினையெச்சமாய் இன்னொரு வினையைத் தழுவியே அமையும்.

அதனால் தொடர் இரண்டு விதமாகப் பிரிக்கப்படுகிறது. படித்த பையன் என்பதில் படித்த என்பது அடைச்சொல் (attribute) என்றும் பையன் தலைச்சொல் (headword) என்றும் தொடரியல் நோக்கில் குறிப்பிடப்படும். அப்படிப்பட்ட தொடர் உள்வட்டத் தொடர் (endo centric construction) என்றும் அழைக்கப்படும். ஆனால் பாடத்தைப் படித்தான் என்பது பாடத்தை என்பது அடையாகக் கொள்ள முடியாது. அதனால் அது வெளிவட்டத் தொடர் (exo centric construction) என்று குறிப்பிடப்படும்.

ஒரு தொகைச் சொல்லே அதனுடைய தொடர் அமைப்பை ஒட்டி உள்வட்டத் தொடராகவும் வெளிவட்டத் தொடராகவும் அமையும். வெள்ளாடை வந்தது என்பதில் ஆடை வந்தது என்ற பொருள் படுவதால் உள்வட்டத் தொடர் ஆகும். வெள்ளாடை வந்தான் என்பது அதை அணிந்த மனிதரைக் குறிப்பதால் அது வெளிவட்ட தொடர் ஆகும். தமிழில் முன்னது பண்புத் தொகை என்றும் பின்னது அன்மொழித் தொகை என்றும் குறிப்பிடப்படும்.

## II. தொல்காப்பியம்

தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரத்திலேயே தொடரியல் கருத்து அமைந்துள்ளது. அதற்குக் காரணம் புணரியல் என்பது எழுத்ததிகாரத்தின் பகுதியாகக் கருதப்பட்டது தான். புணர்ச்சி என்பதே இரண்டு சொல் சேர்வது என்றாலும் நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் சேருவதால்

ஏற்படும் எழுத்து மாற்றங்களுக்கு தொடரியல் உறவும் காரணமாக இருப்பதுதான்.

மரம் + கிளை -----> மரக்கிளை,

மரம் + குறிது -----> மரங்குறிது.

இந்த இரண்டு உதாரணத்திலும் மகர மெய் நிலைமொழியாகவும் ககரம்வருமொழியாகவும் அமைந்திருந்தாலும் புணர்ச்சி மாற்றத்துக்குக் காரணம் அந்த சொற்களிடையே இலக்கண உறவு மாற்றமே. அதாவது முன்னது வேற்றுமை உறவு, பின்னது அல்வழி உறவு உடையவை. எனவே எழுத்ததிகாரத்தில் புணரியலில் அமைந்துள்ள தொடரியல் கோட்பாடுகள் அறியத்தகுந்தவை.

'நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு
குறித்துவரு கிளவியின் முதல் எழுத்து இயையப்
பெயருடன் பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபு ஒன்றே இயல்பு என
ஆங்கு அந்நான்கே புணர்மொழிநிலையே'

என்று புணரியலில் (6) கூறுவதால் புணரியலில் நிலைமொழி, வருமொழி என்று சொற்கள் அமைவதோடு அவை சொல்லியல் நோக்கில் அறியலாம்.

அதாவது, பெயர் + பெயர், பெயர் + வினை, வினை + பெயர், வினை + வினை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உரையாசிரியர்கள் சாத்தன் கை (தொகை), சாத்தன் உண்டான் (வாக்கியம்), உண்டான் சாத்தன் (வாக்கியம்), வந்தான்

போயினான் (வந்தவன் போனான் = வாக்கியம்) . அடுத்து அவைகளுக்கு இடையே அமைந்த தொடரியல் உறவை,

'நிறுத்த கிளவியும் குறித்துவரு கிளவியும்

அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய '(10).

என்றும் கூறுவதால் புணர்ச்சியில் தொடரியல் கருத்தும் இணைகிறது என்று ஆகிறது. அதாவது நிலைமொழி, வருமொழி எழுத்துகள் புணருவது என்ற நிலையைத் தாண்டி அந்த சொற்களின் இலக்கண உறவும் புணர்ச்சி மாற்றத்துக்குத் துணை நிற்கிறது என்று ஆகிறது.

விளங் கோடு (வேற்றுமை)

விளக் குறிது (அல்வழி)

அகரம் நிலைமொழியாயும் ககரம் வருமொழியாகவும் அமைந்திருந்தாலும், அவைகளின் இலக்கண உறவைப் பொறுத்தே மாறுபட்ட புணர்ச்சி மாற்றம் நடைபெற்றுள்ளது.

மரம் + பெட்டி -----> மரப்பெட்டி

மரம் + பெரிது -----> மரம் பெரிது.

இங்கு இரண்டு தொடர்களிலும் நிலைமொழி மகர மெய்யாகவும் வரு மொழி பகர மெய்யாகவும் அமைந்திருந்தாலும் அவைகளின் இலக்கண உறவு அடிப்படையில் புணர்ச்சி மாற்றம் பெற்றுள்ளன. அந்தப் புணர்ச்சி மாறுபாட்டின் காரணத்தைத் தொடரியல் கோட்பாட்டின் அடிப்படையில் விளக்கியுள்ளது சிறப்பானது.

நிலைமொழி, வருமொழி தனிச்சொல்லாக அமையாமல் தொடராகவும் அமைவதை உணர்ந்து அதையும் விளக்கியுள்ளது புணர்ச்சியின் தொடரியல் செயல்பாடு ஆழமானது என்பதைப் புலப்படுத்துகிறது.

# மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் அழகியல்

பேராசிரியர். **ம. திருமலை,**
மேனாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
கைபேசி : 9442158802

**தமிழின் பல்வேறு அறிவுத் துறைகள் :**

இதே போன்று தமிழ் மொழியின் பல்வேறு அறிவுத் துறைகளின் வளர்ச்சி, அவற்றின் பயன், எல்லையின்மை போன்று மீனாட்சியம்மை திகழ்கிறாள் என்பதைக் குமரகுருபரர் "நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே" என்ற அடியில் கூறுகிறார். இதுவும் கூட ஒரு நுண்பொருள் உவமைதான்! உவமையே படிமமாகச் செயலாற்றுகிறது. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் இந்த ஓர் அடியை எளிதில் மேற்போக்காக வாசித்து விட்டுச் சென்று விட முடியாது; ஆழ்ந்து நோக்கினால் சுவை புலப்படும்!

**கிழங்கை அகழ்தல் அகந்தை நீக்குதல் :**

இறையனுபவம் பெற வேண்டுமானால் ஒருவன் தன் மனத்தில் புதைத்து வைத்திருக்கும் "நான்" எனும் அகந்தையை நீக்க வேண்டும். பசவண்ணரிடம் அவரது சீடர்கள் "நீங்கள் இறுதியாக எங்கே போவீர்கள்?" என்று கேட்ட போது, "நான் போனால் துறக்கம் போவேன்" என்று பசவண்ணர் விடை கூறினார். "ஞானியாகிய தங்கட்குத் தாங்கள் இறுதியாகப் போகுமிடம் பற்றி ஐயமின்றித் தெரியாதா!" என்று மீண்டும் சீடர்கள் கேட்க பசவண்ணர் பின் வருமாறு விடை கூறினார்.

மனிதன் எவ்வளவு உயர்ந்தவனானாலும் சிறியவனானாலும் அவனவன் அளவிற்கு ஏற்றவாறு "நான்" எனும் அகந்தை மனத்தில் தங்கியிருக்கும். அது வெளிப்படையாகத் தெரிவதில்லை; மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும். எனவே மண்ணை அகழ்ந்து கிழங்கினைத் தோண்டி எடுப்பதைப் போல, மனத்தை அகழ்ந்து ஆணவத்தைத் தோண்டி எடுத்து வெளியில் எறிந்து விட வேண்டும். அகந்தையின் சிறு பகுதியைக் கூட விட்டு விடாமல் முழுமையாகக் கல்லி எறிய வேண்டும்; சிறிது எஞ்சியிருந்தால் கூட, மீண்டும் வளர்ந்து பேருருக்கொண்டு விடும் அபாயம் நிறைந்தது ஆணவம்! எனவே அகந்தை சிறிதுமற்ற தூயவர்

மனத்தில் இறைவன் தங்கியிருக்கிறான். இதனை "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே" என்று குமரகுருபரர் கூறுகிறார்.

**அகந்தைக் கிழங்குப் படிமமும் நவீன உளவியலும் :**

அகந்தை (Ego) பற்றிய குமரகுருபரரின் கருத்து இன்றைய நவீன உளவியல் சிந்தனைக்கும் ஏற்புடையதாதலை அறிக டாக்டர். ஹென்றிக்யூஸ் என்ற வல்லுநரின் ஆய்வின் படி, அகந்தை மனத்தின் ஆழத்தில் தங்கி நின்று ஒரு மனிதனின் செயல்களையும் பண்புகளையும் தீர்மானிக்கிறது. ஒரு மனிதனால் இதனைக் கட்டுக்குள் கொண்டு வர முடிந்தால் அம்மனிதன் இறை நிலையுடன் ஒன்றிவிடத் தகுதி பெறுகிறார். எனவே தான் அகந்தை இல்லாத மனிதனின் உள்ளம் இறைவன் வாழும் கோயில் என்ற கருத்தைக் குமரகுருபரர் முன்வைக்கிறார்.

குமரகுருபரரின் இப்பாடல் வாசகனின் உள்ளத்தில் மருட்கைச் சுவையைத் தோற்றுவிக்கிறது. கண்ணுக்குப் புலப்படுகின்ற இவ்வுலகத்தைக் கடந்து நிற்கும் இறைவனின் உள்ளத்தில் நிரந்தரமாகக் குடியிருப்பவள் அல்லது நிரந்தரமாக இறைவனால் ரசிக்கப்படுபவள் அன்னை மீனாட்சி, இறைவி உயிரோவியமாகத் திகழ்கிறாள். இது ஒரு படிமம். இதே முறையில் இப்பாடல் முழுவதிலும் படிமங்கள் நிறைந்திருக்கினறன. இதனால் வாசகன் மருட்கையுணர்வை அடைகிறான்.

**தொல்காப்பியர் சுவைகள் பற்றிக் கூறும் போது,**
**"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே"**

என்கிறார். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பாடலில், சுவையே, விளக்கே, பிடியே, ஓவியமே என்று வியப்புத் தோன்றும்படியாகப் பாடுகிறார் குமரகுருபரர். சைவப் பெருமக்களால் மிகவும் போற்றிப் பாதுகாக்கப்படும் பாடல் இது.

**உளவியல் நுட்பம் நிறைந்த அம்புலிப் பருவப்பாடல் :**

பிள்ளைத்தமிழில் அம்புலிப் பருவம் பாடுவது மிகவும் சிக்கலான பணியாகும் "அம்புலி புலவர்க்குப் புலி" என்று கூறுவர் புலவர். குழந்தையுடன் விளையாடி மகிழ வருமாறு நிலவை அழைப்பதாகப்

பாடுவது அம்புலிப் பருவத்தின் பொருளமைதி. குமரகுருபரர் அம்புலிப் பருவம் பாடுவதிலும் தனது புலமைத்திறனை நன்கு வெளிப்படுத்துகின்றார். "நிலவே நீ விண்ணுலகை விட்டு மதுரைக்கு வந்தால் உனக்கு நன்மைகள் பல கிடைக்கும்" என்று பட்டியலிட்டுக் கூறுகிறார்; இனி பாடலைக் காண்க:

**"முன்பு உம்பர் அரசு செய் பெரும்பாவமும் கோவ**
**முரிமாத் தொடர் சாபமும்**
**மும்மைத் தமிழ்ச் செழியன் வெப்பொடு கொடுங் கூனும்**
**மோசித்த இத்தலத்தின்**
**தன் பெருந்தன்மையை உணர்ந்திலை கொல்? சிவ**
**ராசதானியாய்ச் சீவன் முத்தித்**
**தலமுமாய்த் துவாத சாந்தத் தலமும் ஆனது இத்**
**தலம், இத்தலத்திடையேல்**
**மன்பெருங் குரவற் பிழைத்த பாவமும், மற்றை**
**மாமடிகள் இடு சாபமும்**
**வளரிளம் பருவத்து நரை திரையும் முதிர் கூனும்**
**மாற்றிடப் பெறுதி கண்டாய்!**
**அன்பர் என்புருகக் கசிந்திடு பசுந்தேனோடு**
**அம்புலி ஆட வா வே!**
**ஆணிப்பொன் வில்லியுணர் மாணிக்க வல்லியுடன்**
**அம்புலி ஆட வாவே"**

- அம்புலிப்பருவம், பா.6

இப்பாடல் மிகுந்த உளவியல், உலகியல் நுட்பம் நிறைந்த பாடலாகும். ஒருவரிடம் ஒரு பணியைச் செய்யுமாறு வேண்டுகோள் வைக்கும் போது, பல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். 'இந்தப் பணியைத் தாங்கள் செய்தால், தங்களுக்கு இன்னின்ன நன்மைகள் ஏற்படும்' என்று கூறி, அதன் பின்னர் வேண்டுகோளை முன்வைப்பதானது உலகியலில் வெற்றியைத் தரத்தக்க செயல் முறையாகும். ஒருவரைப் பணி செய்யத் தூண்டுதல் (Motivation) என்பது மனிதவள மேலாண்மைத் துறையில் மிக முக்கியக்கூறாகும். ஒருவரை வலிந்து பணி செய்ய வற்புறுத்துவதைவிட அவரை உளவியல் ரீதியாகக் கையாண்டு பணியில் ஈடுபடுத்துதல் சிறந்த மேலாண்மைமுறை; அது இங்கு புலப்படுகிறது. எனவே குமரகுருபரர் நிலவை நோக்கி,

"நீ மதுரைக்கு வந்து மீனாட்சியம்மையுடன் விளையாடத் தொடங்கினால், உனக்கு உன் ஆசிரியர் இட்ட சாபம் விலகும். உன் மாமனாகிய தக்கன் உனக்கிட்ட சாபமும் தீரும். மதுரைக்கு வந்ததால் தான் இந்திரனின் சாபம் நீங்கியது; வெள்ளை யானையும் சாபம் நீங்கப் பெற்றது. கூன் பாண்டியனின் வெப்பு நோயும் தீர்ந்தது. மதுரை சீவன் முக்தித் தலம் என்பதால் சிறப்பிற்குரியது. எனவே நீ மீனாட்சியம்மையுடன் வந்து விளையாடுக" என்று கூறி அழைக்கிறார். இப்பாடல் நிலவுடனும் மதுரையுடனும் தொடர்புடைய பல்வேறு தொன்மக் கதைகளை விதந்தோதுகிறது.

**நிலவும் தேனடையும் :**

குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் கற்பனை நயமிக்க பல பாடல்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. மதுரை நகரத்தின் மாடங்கள் மிக உயர்ந்தனவாக இருக்கின்றன. அதில் உறையும் மகளிர் வானத்தில் ஒளிரும் நிலவைத் தேனடை என்று தவறாகக் கருதிக் கொண்டு, அவற்றைப் பறித்துத் தருமாறு காதலர்களிடம் வேண்டுகின்றனர். காதலரும் நிலவினைத் தங்கள் கைகளிற் பிடித்துப் பிழியத் தொடங்குகின்றனர். இதனால் வருந்திய நிலவு, "ஐயோ என்னைத் தண்டிக்காதீர்! நான் உங்கள் காதலியரின் முகத்திற்கு ஒப்பானவள் என்று கூறமாட்டேன்; என்னை உயிருடன் விட்டு விடுங்கள்" என்று கோரிக்கை வைப்பதாகக் குமரகுருபரர் கற்பனை செய்கிறார். இப்பகுதி மிகைக் கற்பனையாக அமைந்திருந்தாலும் மகிழ்வுச் சுவையை ஏற்படுத்துகின்றது. மதுரை நகரத்தின் மாடங்களின் உயரமும் பெண்களின் அழகும் ஆடவரின் காதல் உணர்வும் வீரமும் புலப்படும் வகையில் இப்பாடல் அமைந்திருப்பதை உணர முடிகிறது. அழகியலின் அடிப்படைப் பண்புகளுள் ஒன்று வாசகனின் மனத்தில் மகிழ்ச்சியுணர்வைத் தூண்டுவதாகும் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. இங்கு எடுத்துக் காட்டப்பட்ட பாடல்கள் "ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதைப் போலப் பதச் சோறாகக் காட்டப்பட்டவை.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் அனைத்தும் கற்பனை வளம் மிகுந்து சுவை பயப்பன. இவற்றை ஆழ்ந்து பயின்று நுகர்வது இலக்கிய மாணவரின் கடமை.

# மதுரைக்காஞ்சி – மேலாய்வுக்களம்

முனைவர். **இ.கி. இராமசாமி**
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்,
யாதவர் ஆடவர் கல்லூரி,
மதுரை - 17.
கைபேசி: 9842008954

**நோக்கம்:**

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையரின் பதிப்புப் பணியும் ஆராய்ச்சிகளும் அளவிட முடியாதவை. அவரிடமிருந்த சமய நம்பிக்கையும் (Religious faith) மனநிலையும் (Mind set), அவரை நடுநிலை திரிந்து சில தகவல்களை எழுத வைத்துவிட்டன. அவரை அவ்வாறு எழுதவைக்க நச்சினார்க்கினியரும் ஒருகாரணம். இதற்குரிய சான்றுகளைச் சுட்டிக்காட்டுதல் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். உ.வே.சா. பதிப்பித்த **பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், புறநானூறு மூலமும் உரையும்,** அவற்றுக்கு அவர் எழுதிய நூதனமான ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதற்கு முதன்மைச் சான்றுகளாகும்.

**மாங்குடி மருதனாரா? மாங்குடி கிழாரா?**

**மாங்குடி மருதனார்** மதுரைக்காஞ்சியைப் பாடிய பெரும்புலவர் என்று அதன் அடிக்குறிப்புச் சொல்லுகின்றது. புறநானூற்றுப் புலவர்களுள் ஒருவர் பெயர் **மாங்குடி கிழார்,** இருவரும் ஒருவர்தானா? என்ற ஆராய்ச்சியைச் செய்தவர் சாமிநாதையர். மாங்குடி கிழார் என்ற பெயரில் ஒரு நல்லிசைப் புலவர் இருந்தார் என்று புறநானூற்றின் வழி அறியமுடிகிறது. அவர் இயற்றிய செய்யுள் கருத்திலும் சொல்லமைதியிலும் யாப்பிலும் (வஞ்சி) மாங்குடி மருதனாரின் பாடல் நெறியினைப் போன்று இருப்பதால் **மாங்குடி மருதனாரும் மாங்குடி கிழாரும்** ஒருவரே என்று முடிவுசெய்தார்.

சாமிநாதையர் பதிப்பித்த புறநானூற்றின் செய்யுள் எண் 24,26,396 ஆகியவற்றின் புலவர் மாங்குடிகிழார் என்றே

குறித்துள்ளார். **அவனை மாங்குடிகிழார் பாடியது** என்று 24,26 ஆம் செய்யுட்களுக்கு அடிக்குறிப்புத் தந்துள்ளார். இங்கு அவனை என்றது தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனை.

புறநா. 396 ஆம் செய்யுள், வாட்டாற்று எழினியாதனை மாங்குடிகிழார் பாடியது என்றும் குறிப்புத் தந்துள்ளார். இந்த அடிக்குறிப்புக்களைச்சாமிநாதையருக்கு முன்பிருந்த அரும்பதவுரைகாரரோ, தொகுத்தவர்களோ, உரையாசிரியர்களோ எழுதியிருக்கக்கூடும். ஆனால் மாங்குடிமருதனாரும் மாங்குடிகிழாரும் ஒருவரே என்று சாமிநாதையர் நிறுவிவிட்டார். ஆனால் அடுத்து வந்த பதிப்புகளில் அவர் தமது முடிவைப் பின்பற்றவில்லை.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிக்கும்.

> **ஒண்தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
> **தண்கமழ் தேறல் மடுப்ப, மகிழ்சிறந்து,**
> **ஆங்கினிது ஒழுகுமதி பெரும** (புறநா. 24:31-33)

எனவரும் பாடற்பகுதியும்,

> **விலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய**
> **மணங்கமழ் தேறன் மடுப்ப நாளும்**
> **மகிழ்ந்தினி துறைமதி பெரும** (மதுரைக்காஞ்சி, 779 - 781)

எனவரும் பாடற்பகுதியும் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டிருக்க முடியாது. முன்னதை மாங்குடிகிழாரும் பின்னதை மாங்குடிமருதனாரும் பாடினர் என்பதை மறுத்து அவற்றைப் பாடியது ஒருவரே! அவர் மாங்குடிமருதனார் என்று முடிவுரைத்துள்ளார் சாமிநாதையர்.

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் சங்கத்தமிழ் ஆராய்ச்சியில் (தெ.பொ.மீ. களஞ்சியம்) மாங்குடிமருதனார் என்ற ஒரே பெயரை மட்டும் கையாண்டுள்ளார் (ப. 108). ச.வே. சுப்பிரமணியன், வ. குருநாதன் போன்றோரின் பதிப்புக்களில் மாங்குடிகிழார் என்ற பெயரும் மாங்குடிமருதனார் என்ற பெயரும் வெவ்வேறு புலவர்கள் போலச் சுட்டப்பட்டுள்ளன!

இன்றும் மதுரைக்காஞ்சியைக் கற்போர் அதனை இயற்றியவர் **மாங்குடி மருதனார்** என்று மனத்தில் இறுத்திக்கொள்ளுகின்றனர். புறநானூற்றின் 24,26,396 ஆம் செய்யுட்களை இயற்றியவர் **மாங்குடிகிழார்** என்று வைத்துக் கொள்ளுகின்றனர். மத்திய, மாநிலப் போட்டித் தேர்வு வினாத்தாளில் இப்பெயர்கள் மயக்குறு நிலையில் கேட்கப்படுகின்றன. எது சரி என்ற வினாவுக்கு விடை எழுதும்போது மாணவர்கள் குழம்பிவிடுகின்றனர். ஆராய்ச்சியின் முடிவைக் கடைப்பிடிக்காமல் பின்வந்த பதிப்புக்களை வெளியிடலாமா?

மாங்குடிகிழார் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது அவைக்களப்புலவர்களின் தலைவன் என்றும், அவனுக்கு நிலையாமையை அறிவுறுத்தி மதுரைக்காஞ்சியைப் பாடியமையால் அவரைக் காஞ்சிப்புலவன், மதுரைக்காஞ்சிப்புலவன் என்னும் பெயர்களால் வழங்கினர் என்றும் காரணம் கூறுகின்றார். மதுரைக்காஞ்சிப்புலவன் என்றால் ஐயம் வராது. காஞ்சிப்புலவன் என்றால் காஞ்சிபுரத்துப்புலவன் என்று வேறு ஒருபொருளும் தோன்றும் அல்லவா? காஞ்சியில் சமணர் பலர் வாழ்ந்தனர் என்பதும் அவர்கள் இளமையும் யாக்கையும் செல்வமும் நில்லாதவை; அதனால் உடனே துறவறத்தை மேற்கொள்ளுக! என்ற மெய்யியலைக் கற்பித்தவர்கள் என்றும் அறிகின்றோம்.

புறநானூற்றின் 72 ஆம் செய்யுளைப் பாடியவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். அந்தப்பாட்டில் தன்னுடைய அவைக்களத்தின் தலைமைப் புலவராக இருந்த மாங்குடிமருதனார் மீது ஆணையிட்டு வஞ்சினம் மொழிகின்றான்.

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை." (புறநா. 72:14-16)

புறநானூற்றின் பாட்டினுள்ளேயே மாங்குடிமருதன் என்ற பெயர் அகச்சான்றாகக் கிடைத்துவிட்டது. மதுரைக்காஞ்சியின் கொளுவிலும் மாங்குடிமருதன் என்ற பெயர் புறச்சான்றாகக் கிடைத்துவிட்டது. இனி

மாங்குடிமருதனார் என்ற பெயரையே எழுதிவிடலாம். மாங்குடிகிழார் என்ற பெயரைத் தவிர்த்துவிடலாம். ஓர் ஐயத்தை எழுப்பிவிட்டு அதற்குத் தீர்வு கண்ட பின்பு மீண்டும் குழப்பிக் கொள்ளத் தேவையில்லை.

**பல்சாலையா? பல்யாக சாலையா?**

மதுரைக்காஞ்சியுள் **பல்சாலை முதுகுடுமி** (அடி - 759) என்று வருமிடத்துச் சாமிநாதையர் **பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** என்று பொருள் எழுதுகின்றார். சாலை என்பதற்கு அறச்சாலை, மரச்சாலை, பாடசாலை, காந்தளூர்ச்சாலை கல மறுத்தருளிய என்று கல்வெட்டில்வரும் நெடுஞ்சாலை என்று வேறு விளக்கங்களும் இருக்க, சாமிநாதையர் யாகசாலை என்று பொருள் எழுதுகின்றார். அவருடைய சமயச் சார்புதான் இதற்குக்காரணம். மேலும் மூலபாடத்தில்,

"பல்கேள்வித் துறைபோகிய,
தொல்லாணை நல்லாசிரியர்" (அடி. 760 - 761)
என்றிருந்ததை,
"நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்" (அடி 760 - 761)

என்று பாடங்கொண்டுள்ளார். தமது நம்பிக்கைக்குத் தக்கவாறு பாடாந்தரங்கொண்டு விளக்கம் எழுதுகின்றார். இதே தொடர் பட்டினப் பாலையில்,

"பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்" (அடி 169 - 170)

என்றே வந்திருப்பதை அவரே அடிக்குறிப்பில் காட்டியுள்ளார். நல்லாசிரியருக்கு கேள்வித்துறைபோகிய என்ற அடைமொழி பொருந்தும். வேள்வித்துறைபோகிய ஆசிரியர் என்பது பொருந்துமா?

கேள்வியை, வேள்வி என்று வைத்துக் கொண்டாலும் மறக்களவேள்வி போன்று போரில் செய்கின்ற தியாகத்தையும் அதுகுறிக்கும், மறக்கள வேள்வியை வியந்து பாடிய புலவர் என்று ஏன் பொருள் கொள்ளலாகாது! இக்காலத்தில் விடுதலை வேள்வி என்ற சொற்றொடர் யாகம் என்ற பொருளிலா ஆளப்படுகின்றது? மேலும் மாங்குடிமருதனார் பாண்டியனுடைய களவேள்வியை, போர் வீரத்தையல்லவா பாடியுள்ளார்!

**நிலந்தரு திருவின் நெடியோன் யார்?**

"நிலந்தரு திருவின் நெடியோன் போல" என்று வரும் மதுரைக்காஞ்சியின் 763ஆம் அடிக்கு நச்சினார்க்கினியரும் சாமிநாதையரும் கொண்ட பொருள் ஆராய்ச்சிக்குரியது. நிலந்தரு திருவின் பாண்டியன் நெடுஞ்செழியன், பல்சாலை முதுகுடுமிப் பெருவழுதி, முந்நீர் வடிவலம்ப நின்றபாண்டியன் போன்றோர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனின் முன்னோர்கள் ஆவர். பாண்டிய நாட்டின் நிலவெல்லையின் ஒருபகுதி கடல்கோளால் மூழ்கிவிட்டது. அந்தக் கடல் கோளிலிருந்து தப்பித்துவந்த மக்களுக்காக அண்டை நாட்டரசர்களிடம் பேசியும், அவரோடு போரிட்டும் வென்று புதிய நிலப்பகுதியைப் பெற்றுப் புலம்பெயர்ந்தவர்களுக்கு இடமும் வாழ்வாதாரமும் ஏற்படுத்திக் கொடுத்தவன் நிலந்தரு திருவிற்பாண்டியன். அவனைப்போல, நீயும் நல்லாசிரியரிடத்தே கேட்டு அறிவாயாக! எதனைக் கேட்டு அறிவது? நிலையாமை பற்றிக் கேட்டு அறிவது; முன்னர் மாண்டுபோன மன்னர்கள் கடல் மணலைவிடப் பலராவர்; **கொடுப்பதால் வரும் புகழ் ஒன்றுதான் நிலையானது என்ற மெய்யியலைக் கேட்டு அறிவாயாக!** என்று உணர்த்துகின்றார் மாங்குடி மருதனார். இயல்பான - இயற்கையான பொருள் விளக்கம் இப்படியிருக்க, நச்சினார்க்கினியரும் சாமிநாதையரும் திருமால் திருவிக்கரம அவதாரம் எடுத்து மண்ணையும் விண்ணையும் அளந்தபின்பு மாவலியின் தலையில் கால்வைத்து அழுத்திவிட்டு அந்த இடத்தையும் பெற்றார் என்று 'நெடியோன்' என்ற சொல்லுக்கு வலிந்து விளக்கம் எழுதுகின்றார். அப்படியானால் உலகையே அளந்த உத்தமனுக்கு உபதேசம் செய்தது போல ஆகிவிடாதா? அடிமுடி காணமுடியாதவன் சிவபெருமான்; அவனே நெடியோன் என்பர் மற்றொரு சாரார். நிலந்தரு திருவின் பாண்டியன் உலகத்தையே வென்றான் என்ற தகவல் இல்லையே! நின்றசீர் நெடுமாறன் என்ற பெயரில் ஓர் அரசனும் இருந்தான். நெடுமாறனுக்கும் நெடியோனுக்கும் பெரிய வேறுபாடில்லை. மேலும் நெடுஞ்செழியனை நெடியோன் என்று சுருக்கிச் சொல்லுவதுதானே பொருத்தமுடையது.

..... தொடர்ச்சி அடுத்த இதழில்

# சங்கச் செய்திகள்

04.07.2019 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் சுவாமி விவேகானந்தரின் நினைவேந்தல் சங்க வளாகத்தில் நடைபெற்றது. சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் பாஸ்கரன் அவர்கள் சுவாமி விவேகானந்தர் குறித்துச் சிறப்புரையாற்றினார். இதனைத் தொடர்ந்து சுவாமி விவேகானந்தர் வாழ்வைச் சித்திரிக்கும் குறும்படம் திரையிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முதல்வர், துணைமுதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

05.07.2019 அன்று கல்லூரி மகளிர் மேம்பாட்டு அமைப்பு சார்பாக சிவப்புப் புள்ளிப் பிரச்சாரம் சங்க வளாகத்தில் நடைபெற்றது. மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலி மற்றும் தூய்மையின் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் மாணவியர் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் உள்ளங்கையில் சிவப்புப் புள்ளி வரைந்து அதனைப் புகைப்படம் எடுத்து பீரியட்பெயின்.இன் எனும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, தங்களை சிவப்புப் புள்ளிப் பிரச்சாரத்தில் இணைத்துக் கொண்டனர். நிகழ்ச்சியினை மகளிர் மேம்பாட்டு அமைப்பு ஒருங்கிணைப்பாளர் உதவிப் பேராசிரியர் முனைவர் ஜெ. போ. சாந்திதேவி ஒருங்கிணைத்தார்.

10.07.2019 அன்று மக்கள் பாதை அமைப்பு சி.எஸ்.ஐ. கல்லூரியில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான கவிதைப் போட்டியில் செந்தமிழ்க் கல்லூரி மாணவி த.கார்த்திகா கலந்துகொண்டு இரண்டாம் பரிசு பெற்றார்.

15.07.2019 அன்று வேந்தர் தொலைக்காட்சி அறம் செய்வோம்" எனும் அடுத்த தலைமுறைக்கான சிந்தனை நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்று, இன்றைய இளைஞர்களின் நட்பு முற்றிலும் அழகானதுரே சற்றே ஆபத்தானது" என்னும் பொருண்மையில் கருத்தரங்கில் பேசினர். இந்நிகழ்ச்சிக்கு கல்லூரிச் செயலர் இராணி.ந.லட்சுமி குமரன்சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார். பேராசிரியர் முனைவர் ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். கல்லூரி முதல்வர் மற்றும் துணைமுதல்வர் வாழ்த்துரை வழங்கினர்.

19.07.2019 அன்று முற்பகல் 10 மணியளவில் கல்லூரி வைரவிழா அரங்கில் செந்தமிழ்க் கல்லூரியின் மேனாள் செயலாளர் வழக்குரைஞர் மா.சங்கரபாண்டியனார் அவர்களின் 13ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு அறக்கட்டளைச் சொற்பொழிவு மற்றும் மருத்துவ முகாம் நடைபெற்றது. கல்லூரிச் செயலர் இராணி.ந.லட்சுமி குமரன்சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். தமிழக அரசின் மேனாள் அமைச்சர் திருமிகு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் நினைவுரையும், இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல்" என்னும் தலைப்பில் சிறப்புரையும் ஆற்றினார். அவர் தமது உரையில், சேதுபதி மன்னர் ஆற்றிய பணிகளுக்காக தமிழ்ச்சமூகம் அவருக்கு நன்றிக்கடன் பட்டுள்ளது. ஆன்மீகம், தமிழ், சமூகம் என அனைத்து நிலைகளிலும் சேதுபதி மன்னர் ஆற்றிய பணி வரலாறு இருக்கும் வரையில் நிலைபெற்றிருக்கும். தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகியவற்றின்

சிறப்பினையும், அவை எடுத்துரைக்கும் வாழ்வியல் செய்திகளையும் விளக்கினார். முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்புரையும் துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் நன்றியுரையும் வழங்கினர். இதனைத் தொடர்ந்து மதுரை வேலம்மாள் மருத்துவமனை சார்பாக இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கல்லூரி மாணவ, மாணவியருக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

24.07.2019 அன்று கல்லூரி நாட்டுநலப் பணித்திட்டம் மற்றும் இராசாசி அரசு மருத்துவமனை இணைந்து குருதிக்கொடை முகாம் கல்லூரியில் நடைபெற்றது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முகாமினைத் தொடங்கி வைத்தார். மணியம்மை மழலையர் தொடக்கப் பள்ளித் தாளாளர் திரு. பி.வரதராஜன் அவர்கள் நோக்கவுரையாற்றினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் செய்திருந்தனர்.

25.07.2019 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் செந்தமிழ் பத்திராதிபர் மகாவித்துவான் மு.இராகவையங்கார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. மதுரை பாத்திமாக் கல்லூரி மேனாள் துணைமுதல்வர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவருமான திருமதி சி.எஸ்.விசாலாட்சி சுப்ரமணியன் அவர்கள் கம்பனும் கண்ணதாசனும்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். முதல்வர் வரவேற்புரையும் துணைமுதல்வர் நன்றியுரையும் வழங்கினர். பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

28.07.2019 அன்று விருதுநகர் மாவட்ட இளந்தமிழர் இலக்கியப் பேரவை சார்பில் விருதுநகர் அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்ற சான்றோர் போற்றுதும் சான்றோர் போற்றுதும்' எனும் பொருண்மையிலான சொற்பொழிவு அரங்கில் கல்லூரி இளம் இலக்கியம் இரண்டாமாண்டு மாணவர் பெ.தெய்வம் கலந்துகொண்டு ஞானக்கூத்தன் குறித்துச் சொற்பொழிவாற்றி சொற்பொழிவுச்சுடர்" விருதினைப் பெற்றார்.

30.7.2019 அன்று கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டமும், சிவகாசி பட்டாசு நகர் அரிமா சங்கமும் இணைந்து நடத்திய கண்தான விழிப்புணர்வு முகாமிற்கு சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் வரவேற்றார். அரிமா சங்க பட்டயத் தலைவர் கணேஷ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கண்தானம் குறித்துப் பேசினார். சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி மேனாள் முதல்வர் முனைவர் பாஸ்கரன் அவர்கள் கண்தானத்தின் நன்மைகள் குறித்துக் கருத்துரை வழங்கினார். கண்தானம் பற்றிய குறும்படம் திரையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெற்றது. கண்தானம் குறித்த பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளித்த மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி ஆகியோர் செய்திருந்தனர்.

## செப்டம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

தனிநாயக அடிகளார்
(செப்.1)



சி.இலக்குவனார்
(செப்.3)

பாரதியார்
(செப்.11)

மறைமலையடிகள்
(செப்.15)



திரு.வி.க.
(செப்.17)

கவிமணி தேசிக
விநாயகம்பிள்ளை
(செப்.26)

இராய.
சொக்கலிங்கனார்
(செப்.30)


பதிப்பாசிரியர்: **பேராசிரியர் திரு. இரா.சதாசிவம்**

### ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

**முனைவர் திரு. தி.முருகரத்தினம்**

| | |
|---|---|
| முனைவர் திரு. **இராம.சுந்தரம்** | முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்** |
| முனைவர் திரு. **ம.திருமலை** | முனைவர் திரு. **மு.மணிவேல்** |
| முனைவர் திரு. **இ.மறைமலை** | முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்** |
| முனைவர் திரு. **செ.கந்தசாமி** | முனைவர் திரு. **இ.கி.ராமசாமி** |
| முனைவர் திரு. **பெ.சுயம்பு** | முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்** |

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month


# செந்தமிழ்க் கல்லூரி

## நான்காம் தமிழ்ச்சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் கி.வேணுகா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,
**செயலாளர்**
நான்காம் தமிழ்ச்சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
**THE SECRETARY**
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1